# 2 "தமிழி கூறுகிறாள்..."

## இலக்கு

*இப் பயிற்சி மாணவர்களின் கேட்டல் திறனை வளர்க்கவும், கேட்டதை விளங்கிக்கொள்ளும் திறனை வளர்க்கவும் உதவுகிறது. ஏனெனில் இதில் அவர்கள் என்ன கேட்கிறார்களோ அதனை உடனடியாகச் செயல்படுத்தி பயன்படுத்த வேண்டும். அதேவேளை அவர்கள் விளையாட்டாக ஆசிரியரின் தூண்டிகளைத் தொடர்ந்து கேட்டு தம் கேட்டல் சொற்களஞ்சியத்தை வலுப்படுத்துவர்.*

தரம் 1 - 6

5 - 10 மணித்துளிகள்

**குறிப்புகள்:**

"Simon says" என்ற சிறுவர்களுக்கான ஆங்கில விளையாட்டை அடிப்படையாக்கொண்டு இப்பயிற்சி உருவாக்கப்பட்டது. இது பல்வேறு பெயர்களில் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது.

மாணவர்களின் மொழி பண்பாட்டுக்கு ஏற்ப "தமிழி" என்னும் பெயரை மாற்றி அமைக்கலாம்.

**நடைமுறை:**

- "தமிழி கூறுகிறாள்..." எனத் தொடங்கும் வாக்கியம் மூலம், ஆசிரியர் பிள்ளைகளுக்கு ஓர் எளிமையான கட்டளையை கொடுக்க வேண்டும்.
  எ.கா. தமிழி கூறுகிறாள்...:
  i அமைதியாக அறைக்குள் நடமாடுங்கள்.
  ii கைகளைத் தட்டுங்கள்.
- "தமிழி கூறுகிறாள்..." என தொடங்கும் கட்டளைகளை மட்டுமே மாணவர்கள் நிறைவு செய்தல் வேண்டும். எ.கா. : தமிழி கூறுகிறாள் எனக்கூறாது, "கையை உயர்த்த வேண்டும்!" என ஆசிரியர் கூறினால், மாணவர்கள் அதை செய்தல் கூடாது.
- மாணவர் தவறாக செய்துவிட்டால், (அதாவது தமிழி கூறுகிறாள் எனத்தொடங்காத கட்டளையை நிறைவேற்றினால்) அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு அல்லது சுற்றுகளுக்கு தவிர்க்கப்படுவார்.

### தமிழி சொல்லக் கூடிய மதியுரைகள்:

- ▶ "தமிழி கூறுகிறாள் வலது முழங்காலைத் தொடு"
- ▶ "தமிழி கூறுகிறாள் கதிரையில் நில்"
- ▶ "தமிழி கூறுகிறாள் ஒரு கிழவனைப் போல / ஓர் அரசனைப் போல / ஒரு பதுங்கும் வேடனைப் போல / ஒரு குரங்கைப் போல நட"




**மாற்று வழிகள்:**

- ஆசிரியருக்குப் பதிலாக ஒரு மாணவன் கட்டளைகளைக் கொடுக்கலாம்.
- தமிழி கூறுவதன் எதிர்ச் செயலை மாணவர்கள் செய்ய வேண்டும் "தமிழி இரு என்று கூறினால்" மாணவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.